## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.83/2025** |
| Deposition of witness | : | P.W.2 |
| Name | : | தேவேந்திரன் |
| Father's /Husband Name | : | இனியாஸ் |
| Village | : | சேங்காலிபுரம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 54 |
| Occupation | : | கம்பிபிட்டர் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 25th day of November 2025.

Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேங்காலிபுரம் மாதா கோவில் தெருவில் குடியிருந்து கம்பிபிட்டர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். சாட்சி பார்த்திபனை எனக்கு தெரியும். அவர் தற்போது துபாய் நாட்டில் உள்ளார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரியை குறித்து வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 15.06.2024 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் குடவாசல் சேங்காலிபுரம் சாலையில் அ.சா.1, சாட்சி பார்த்திபன் ஆகிய இருவரும் இருந்த போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ கத்தியை காட்டி மிரட்டி பணம் ரூ.500/-கேட்டார் என்றும், அவரிடமிருந்து ரூ.500/- பணத்தை கத்தியை

காட்டி மிரட்டி கத்தியாலேயே உன்னை குத்தி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டி அ.சா.1ன் பாக்கெட்டில் இருந்த ரூ.500/-பணத்தை பறித்து சென்றார் என்ற சம்பவத்தை நான் தெரிந்துகொண்டேன் என்றும், போலீசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் எதிரியை எனக்கு தெரியாது என்றும், எதிரிக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.25 10:21:27 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.